

# ஷார்ட்ஸ்-ஐ மறுசீரமைக்க கற்றுக்கொள்ளுங்கள்

இந்த வீடியோவில் நீங்கள் ஒரு பழைய டெனிம் ஷார்ட்ஸ்சை எப்படி அழகாக மாற்றுவது என்று கற்றுக் கொள்ளலாம்.










இதற்கு தேவையானவை, ஏதேனும் ஒரு பழைய வேண்டாம் என்று தூக்கிப் போட்ட டெனிம் ஷார்ட்ஸ், ஒரே மாதிரியான இரண்டு லேஸ்கள், தையலுக்கு பயன்படும் குண்டூசிகள்.

லேஸ்சின் நடுபகுதியை ஷார்ட்ஸ்சின் பக்கவாட்டில் இருக்கும் தையலின் மீது பின் செய்து கொள்ளுங்கள். இது சிறிது மேலே இருக்கவேண்டும்.

இதே போல் எதிர்புறமும் ரெடி செய்து கொள்ளுங்கள்.

இப்பொழுது இதை தைக்க உங்கள் உஷா ஜனோமி மிஷினில் வையுங்கள்.

மிஷினை ஆன் செய்து பேட்டர்ன் செலக்டரில் ட க்கும் ஊ க்கும் இடையில் வைக்கவும். மேலும் தையலின் நீளம் 1 ல் இருக்கட்டும்.

இப்போது லேஸ் துணியுடன் சரியாக பொருந்தி இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவும்.

சுலபமாக தைக்க எக்ஸ்டென்ஷன் டேபிளை அகற்றி விடவும். ஒரு காலின் துவாரத்தை மிஷினில் நுழைத்து லேஸ்சின் தொடக்கப் பகுதியை பிரஷர் புட்க்கு கீழே வைக்கவும். பிறகு நிதானமாக தைக்கத் தொடங்கவும். தைக்கும் போது பின்களை எடுக்க மறந்துவிடாதீர்கள்.



துணியை திருப்ப வேண்டுமென்றால், ஊசியை தூக்காமல் பிரஷர் புட் ஐ மட்டும் மேலே தூக்கி துணியை மட்டும் திருப்ப வேண்டும். இது சுலபமாக தைக்க உதவும்.

தைத்து முடிந்ததும், பிரஷர் புட் ஐ தூக்கி ஷார்ட்ஸ்சை வெளியில் எடுத்து நூலை கத்தரிக்கவும்.

இதே போல அடுத்த பகுதியையும் செய்யவும். வாவ் இப்போது உங்களுக்கு ஒரு அழகான டிசைனர் ஷார்ட்ஸ் கிடைத்து விட்டது.

